1989 பிப்ரவரி 21] *[திரு. ஆற்காடு நா. வீராசாமி]*

நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செயயப்பட்டிருக் கிறது. இதற்குப் பின்னும் ஏதேனும் புகார்கள் இருக்குமானால் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியாக திரு. செஞ்சி இராமச்சந்திரன் அவர்கள்.

(ஔ) திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் குடிநீர்த்தட்டுப்பாடு.

திரு. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுக்கால மாக மழை பொய்த்துவிட்டதன் காரணமாக அங்கே இருக்கிற விவசாயிகள் வேலை இல்லாமல், பெங்களூருக்கும் சென்னைக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் எல்லாம் வேலையைப் பெறுகிற வகையிலும், அந்தப் பகுதியில் வாழ்கிற விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற வகையிலும் அந்தப் பகுதியில் நில வரியைத் தள்ளுபடி செய்தும், கடன் தள்ளுபடி செய்தும் சலுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் திண்டிவனம், செஞ்சி ஆகிய பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. எனவே அந்த நிலையைப் போக்க, தற்காலிகத் தேவையாக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினை யைக் குறித்து இரண்டு நாட்களுக்கு முன்பாகத் தமிழகத்திலுள்ள நீர்த் துறையைச் சார்ந்த பொறியாளர்கள் அனைவரையும் அழைத்து, உடனடியாக 7 நாட்களுக்குள் அந்தந்தப் பகுதி களுடைய தேவையைப்பற்றி ஒரு அறிக்கையை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதுமட்டு மல்லாமல், ஆங்காங்கே குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, கூடிய விரைவில் அந்தந்தப் பகுதிகளுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினை யைத் தீர்க்கிற வகையில் செயல்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து அனைத்து உறுப்பினர்களும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். இனிமேல் யாருக்கும் எந்த அனுமதியும் கிடையாது. (குறுக்கீடு) ஏற்கெனவே 40 மணித்துளிகள் ஒதுக்கித் தந்திருக்கிறேன். ஏற்கெனவே உங்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கிறேன். நீங்கள் அமர வேண்டும். பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது நின்று கொண்டிருப்பது முறையல்ல.

கவன ஈர்ப்பு.

(அ) அரிசிவிலை உயர்வு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி பாப்பா உமாநாத் அவர்களுக்கு மாறாக திரு. கோ. வீரையன் அவர்கள் அக்கவன ஈர்ப்பை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, “மாநிலம் முழுவதும் வெளி மார்க்கெட்டில் அரிசி விலை உயர்வு குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

1. தமிழ்நாட்டில் வெளிச் சந்தையில் பல்வேறு ரக அரிசி வகைகளின் சராசரி சில்லறை விலை கீழே தரப்பட்டுள்ளது.

	1 கிலோவின் விலை		
	8—2—89 வார முடிவில் ரூ. பை.	11—1—89 வார முடிவில் ரூ. பை.	10—2—88 வார முடிவில் ரூ. பை.
புழுங்கல் அரிசி			
சன்ன ரகம்	5.14	5.00	4.73
சாதாரணம்	4.61	4.50	4.30
பச்சரிசி			
சன்ன ரகம்	5.01	4.89	4.81
சாதாரணம்	4.48	4.47	4.11